# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 08 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்:முல்லையும் தேரும்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class), Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01.** மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(அ)** படுமழை பொழிந்த பயமிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப
ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

<u>வினாத்தொகுதி:01</u>

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- ஊர்மதி
- புரிந்த
- திரி மருப்பு
- பிணி அவிழ

(iii) முல்லைநிலத்துக் கார்காலம் பற்றிய வர்ணனைகள் இப்பாடலில் துலங்குமாற்றை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:02</u>**

(i)பொதும்பிற் புல்லாளங்கண்ணியார் இப்பாடலைப் பாடிய சந்தர்ப்பத்தைக்குறிப்பிட்டு,பாடலின் பேசுபொருளை எடுத்துக்காட்டுக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நெடுநெறி
- அணந்து
- இரலை
- படுமழை

(iii) கையாளப்பட்ட உவமையணிகள் இரண்டை எடுத்துக்காட்டுக. **(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:03</u>**

(i) இச்செய்யுள் உணர்த்த முற்படும் விடயத்தை இனங்கண்டு எழுதுக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- தெள்அறல்
- தண்பதம்
- மா அரிவை
- பல்லியம்

(iii) பாடலில் வெளிப்படும் உள்ளுறை உவமம் இரண்டை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:04</u>**

(i) பாடலில் வெளிப்படும் குதிரைகள் பற்றிய வர்ணனைகள் யாவை?

(ii) தலைவியை விரைந்து அடையவேண்டுமென்ற தலைவனின் ஆவல் எல்லாறு புலப்படுத்தப்பட்டுள்ளது?

(iii) இப்பாடலினூடாகப் புலப்படும் சங்க இலக்கியப் பண்புகள் நான்கைக்குறிப்பிடுக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:05</u>**

(i) பாடலில் வெளிப்படும் தலைவியின் அழகு எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது எனக் கூறுக.

(ii) கவிதையின் பாடுபொருள் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

(iii) பாடலில் முல்லைநிலத்து கார்காலத்தின் வருகை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

**<u>வினாத்தொகுதி:06</u>**

(i) முல்லைத்திணைக்குரிய கருப்பொருட்களாக பாடலில் குறிப்பிடப்படுபவை யாவை?

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்களில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- புயம்
- புறவு
- கால்
- அயிர்

(iii) இப்பாடலிலுள்ள சிறப்புக்களாக நீர் இனங்கண்டவை யாவை?

**(12 புள்ளிகள்)**